**NP – 088**

# II Semester B.B.A./B.H.M./B.C.A./B.S.W. Examination, August/September 2023
## (NEP Scheme)
## TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)

Time : 2½ Hours Max. Marks : 60

### SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) சீறாப்புராணம் என்னும் நூலின் ஆசிரியர்

1) திருவள்ளுவர் 2) உமறுப்புலவர்

3) வீரமாமுனிவர் 4) இளங்கோவடிகள்

2) ‘பைந்தமிழ்’ என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு

1) உம்மைத்தொகை 2) உவமைத்தொகை

3) வினைத்தொகை 4) பண்புத்தொகை

3) வில்லிபாரதம் இத்தனைப் பருவங்களை உடையது

1) ஆறு 2) நான்கு

3) பத்து 4) எட்டு

4) மரம் என்னும் சொல்

1) இயற்சொல் 2) திரிசொல்

3) திசைச்சொல் 4) வடசொல்

5) புத்தருக்கும் அடிசறுக்கும் என்னும் சிறுகதையின் ஆசிரியர்

1) இ.வில்சன் 2) வைரமுத்து

3) ஹரிணி 4) க. சங்கர்

P.T.O.

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) மலையினின் அகலிய மார்பன் அல்லது இவ்
உலகினில் இலை என ஒருவன் ஆயினான்.

2) வேண்டும் யாவையுமே தருகுவேன் நீரும் வேண்டிய வேண்டுக என்ன

3) குழைகுழைத் தெறியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை
நோக்கார் பொழிமலை யருவி நோக்கார்

4) மால்வழி உளது அன்று ஆயின் வாழ்வினை முடிப்பல் என்றே
ஆலம் வித்து அனையது எண்ணி அழிவினுள் அகன்று நின்றேன்

5) கதிரவன் அருளினால் ஓர் கணத்திடை காதல் கூர
மதலை அங்கு ஒருவன் தன்னை பயந்த பின் வடு என்று அஞ்சி

6) உயர்நிலைப் படிப்பும், பிறகு பட்டப்படிப்பும் முடிந்தவுடன் யார் யாரையோ சிபாரிசுபிடித்து எப்படியெல்லாமோ செலவிட்டு தன் மகனை எம்.பி.ஏ யில் சேர்த்து விட்டார்

7) ''ஊர்மிளை... உனக்கு தெரியுமா ? ஒரு சுலோகம் இருக்கிறது. பெண்கள் சிரித்தால் செண்பக மரம் பூ பூக்குமாம். அது உண்மை தான் போலிருக்கிறது''

8) 'பரவாயில்லேப்பா, எடுத்துக்கிட்டு போங்க, நீங்களா, எடுத்தத்தான் அது திருட்டு. இப்போ நானா குடுக்கிறேன், இது தானம்.''

## SECTION – B

III. எவையேனும் ஐந்திற்குச் சுருக்கமான விடை தருக. (5×4=20)

1) பகுப்பத உறுப்புகளைச் சான்றுடன் கூறுக.

2) பெயரெச்சத்தின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

3) திசைச் சொல்லை விளக்கிச் சான்று தருக.

4) தொகை நிலைத் தொடரினை விளக்கி அதன் வகைகளைக் குறிப்பிடுக.

5) வேடனின் வலையில் விழுந்த மான், நபிகளிடம் கூறியவற்றை எழுதுக.

6) சீவகன் திருமணத்திற்கு இசைந்தமைக் குறித்து விளக்குக.

7) 'அது தான் பரிசு' எனும் சிறுகதையில் தமயந்தியின் பாத்திரப்படைப்புக் குறித்து விளக்குக.

8) ' கைமாத்து' என்ற சிறுகதை கூறும் கடன் வாங்குகிற, கொடுக்கிறவர்களின் மனநிலையை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கிற்கு விடை தருக. **(4×5=20)**

1) பிணையாக நின்ற நபிகளின் கருணையை விளக்கி வரைக.

2) குந்தி கர்ணனிடம் வேண்டிய வரங்கள் யாவை ?

3) நந்தகோன் தன்மகளை சீவகனுக்கு மணமுடிக்க முயன்றதன் விளைவுகளை விளக்குக.

4) 'மேன்மக்கள்' என்னும் சிறுகதையில் மெய்யப்ப செட்டியாரின் பாத்திரப்படைப்பை விளக்குக.

5) 'கானல் நீர் கனவுகள்' என்னும் சிறுகதை புலப்படுத்தும் நெசவாலை விடுதியில் நடக்கும் அவலங்கள் குறித்து எழுதுக.

6) 'அழுக்கு' என்னும் சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை விளக்குக.